செ.வெ.எண். 03 நாள்: 02.05.2020

**வேப்பனப்பள்ளி ஒன்றியம் நல்லூர் கிராமம் மற்றும் காவேரிப்பட்டிணம் பேரூராட்சி சண்முக செட்டி தெரு ஆகிய பகுதிகளில், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு, பாதுகாப்பு, முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து சிறப்பு கண்காணிப்பு குழு அலுவலர் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.கிர்லோஸ்குமார், இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.05.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஒன்றியம் நல்லூர் கிராமம் மற்றும் காவேரிப்பட்டிணம் பேரூராட்சி சண்முக செட்டி தெரு ஆகிய பகுதிகளில், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு, பாதுகாப்பு, முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து சிறப்பு கண்காணிப்பு குழு அலுவலர் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.கிர்லோஸ்குமார், இ.ஆ.ப., அவர்கள், மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. ஆகியோர் இன்று ( 02.05.2020) நல்லூர் கிராமத்தில் நபர் ஒருவருக்கு கொரொனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்..

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்திரவின் படி, கொரோன வைரஸ் தடுப்பு பணிகளுக்கு பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு மாவட்டத்தில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து வேப்பனப்பள்ளி ஒன்றியம் நல்லூர் கிராமத்தை சேர்ந்த நபர் ஒருவர் வெளிமாநிலம் சென்று வந்த நிலையில் அவரை கண்காணித்து மருத்துவ குழுவினர் மூலம் கொரொனா வைரஸ் சோதனை செய்து கொரோன வைரஸ் தொற்று இருந்தது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு, பாதுகாப்பு, முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து சிறப்பு கண்காணிப்பு குழு அலுவலர் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.கிர்லோஸ்குமார், இ.ஆ.ப., அவர்கள் இன்று ஆய்வு மேற்கொண்டு அக்கிராமத்திற்கு உட்பட்ட எல்லை பகுதியில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்தும், மருத்துவ குழுவினர் மூலம் தடுப்பு பணிகள் மேற்கொண்டது குறித்து கேட்டறிந்தார்.

கிராமத்தில் உள்ள அனைவருக்கும் முக கவசங்கள் வழங்குவதோடு, அக்கிராமத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் வீடு வீடாக மருத்துவ குழுவினர் சென்று பொது மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும். மேலும் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தொற்று நோய் ஏற்பட்டுள்ள நபரின் உறவினர்களை கண்டறிந்து அவர்களுக்கும் வீட்டில் கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கிராமத்திற்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கும் வகையில் பொதுமக்கள் அனைவருக்கும் பொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் . மேலும்

கிராமத்தை சுற்றி 7- கி.லோ மீட்டர் தூரத்திற்கு கட்டுப்பாட்டு பகுதியாக அறிவித்து கண்காணிக்கப்படுவதை கேட்டறிந்தார். பொதுமக்கள் யாரும் வீட்டை விட்ட வெளியே வரக்கூடாது என ஆய்வின் போது வலியுறுத்தினார்.

மேலும் விவசாயிகள் வேளாண்மை உற்பத்தி பொருட்களான தக்காளி, புளி, பால் உள்ளிட்ட பொருட்களை சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக விற்பனை செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து காவேரிப்பட்டிணம் பேரூராட்சி சண்முக செட்டி தெருவில் வசிக்கும் மக்கள் தங்களை முற்றிலும்மாக தனிமை படுத்திக்கொள்ள வேண்டும் அத்தியாசிய பொருட்கள் வாங்க யாரும் வெளியே வரவேண்டாம். தேவையான பொருட்கள் தன்னார்வர்கள் மூலமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்பகுதிய முழுவதும் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட கட்டுப்பாட்டு அறை எண் 1077/ 04343 234444/ 230044/ என்ற எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

இவ்வாய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்டஅலுவலர் திரு.பி.பெரியசாமி, துணை இயக்குநர் ( சுகாதார பணிகள்) டாக்டர்.கோவிந்தன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ராஜேந்திரன், செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், வேப்பனப்பள்ளி வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர்.சரவணன், நாச்சிகுப்பம் மருத்துவ அலுவலர் டாக்டர்.பூவிழி, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் திரு.தணிகாசலம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சிவகுமார், திரு.வேடியப்பன், திருமதி. சுபாராணி, காவேரிப்பட்டிணம் மருத்துவ அலுவலர் திரு.சோமசுந்தரம் மற்றும் களப்பணியாளர்கள் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள்தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.